*மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : கனம் ஹாண்டே அவர்கள் இதற்கு நாம் கொடுக்க வேண்டிய அளவை விட அதிகமான முக்கியத்துவம் கொடுக்கிறோமா என்றார்கள். சுதேசமித்திரன் பத்திரிகை பன்னெடுங்காலமாகத் தமிழ்நாட்டிலுள்ள செல்வாக்கு மிகுந்த ஒரு பத்திரிகை. அதில் ஒரு செய்தி தவறான முறையில் வருமானால் அதை நாம் தவறு என்று எடுத்துக் காட்டுவது தேவைக்கு அதிகமான முக்கியத்துவம் அந்தப் பத்திரிகைக்குக் கொடுத்ததாகாது. அந்த முறையில் அது பற்றிப் பேசுவது முறை என்று கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எல்லோரும் ஒத்துக்கொள்ளத்தக்க ஒன்றைச் சொன்னார்கள். சபையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பற்றிப் பத்திரிகைகள் விமர்சனம் தெரிவிக்க அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது என்று சொன்னார்கள். முழு உரிமை இருப்பது மட்டுமல்ல, அதைச் செய்வதற்குத்தான் பத்திரிகைகள் இருக்கின்றன. அது அவர்கள் கடமையும் கூட. ஆனால் இங்கு நடைபெற்றிருப்பது நான் சொல்லாத ஒன்றை வைத்துக் கொண்டு, நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக எடுத்துக் கொண்டு, அதன் பேரில் விமர்சனம் செய்திருப்பது ஆகும். அது முறையல்ல. அது நம் உரிமையைப் பாதிக்கிறது என்பதுதான்.

(ii) நவமணி, நவசக்தி நாளிதழ்களில் வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதே பொருள் பற்றி திரு. அரங்கநாதன் அவர்களும் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மு.ப. 10-30

THIRU R. N. RANGANATHAN : Mr. Deputy Speaker, Sir, I wish to raise under rule 184 of the Assembly Rules, a matter of privilege in regard to the report of the Chief Minister's speech made in this house on 28th August 1968 in Navamani, dated 29th August 1968 and the reported speech of Thiru C. Subramaniam, President, Tamil Nadu Congress Committee, at a public meeting held on August 29, 1968 at Mylapore, Madras, in the daily Navasakthi, dated 30th August 1968 and the reported speech of Thirumathi Anandanayaki in the Navasakthi, dated 31st August 1968.

The Hon. Chief Minister has stated during his speech on the No Confidence motion as follows :

"நானே பல கதைகள் எழுதி இருக்கிறேன். பல கதைகளைப் படித்திருக்கிறேன். தொடையைத் தட்டிய பெண்ணைப் பற்றி நான் கதை கூட எழுதியதில்லை. எந்தக் கதையிலும் படித்ததும் இல்லை அவர்கள் தொடை வலிவுள்ள தொடையாக இருக்கலாம்."

But in the Navamani the speech has been published and reported as :

"ஒரு வேளை அது மலிவுள்ள சரக்கு போலும். மலிவான விஷயம் போலும்."

Thiru C. Subramaniam while addressing the public meeting is reported to have said :

"இப்படிப் பெண்களைப் பார்த்து மலிவுச் சரக்கு என்று முதல் மந்திரி பேசுவாரானால், அவர் தமிழ்நாட்டுக்கு முதன் மந்திரியாக இருக்க லாயக்கானவர்தானா ?"

His speech was reported in the daily Navasakthi, dated 30th August 1968, under the caption—

"தமிழ்ப் பெண்களை மலிவுச் சரக்கு என்று பேசுவதா ? அண்ணதுரை சட்டசபைப் பேச்சுக்கு சி. எஸ். கண்டனம்—சபை நடவடிக்கையிலிருந்து நீக்கிவிட வேண்டுகோள்."

Thirumathi Anandanayaki is reported to have said at a public meeting held at Chetput—

"சட்டமன்றத்தில் முதன் மந்திரி தமிழ்நாட்டுப் பெண்களைப் பற்றி மலிவு சரக்கு என்று பேசுவது எவ்வளவு மானங்கெட்ட பேச்சு. நட வடிக்கைப் புத்தகத்திலிருந்து நீக்கிவிடவில்லை யென்றால் சாகும்வரை. உண்ணா விரதம்."

The above speeches and publications are libels upon this House and the Hon. the Chief Minister. It has always been regarded that publishing wilful misrepresentation, perverted, distorted and injurious report of the debate in the House and the speech of the Hon. Chief Minister as a breach of privilege. Speeches and publications referred to above are wilful and deliberate misrepresentation of the speech made in this House and contain insinuations calculated to bring the House and Hon. Chief Minister into disrespect, and therefore it constitutes breach of privilege. I therefore request that I may be permitted to raise a matter of privilege against Thiru C. Subramaniam, Tamilnad Congress Committee President, Thirumathi Anandanayaki and the Editors and Publishers of Navamani and Navasakthi.

(iii) 'ஜெயபேரிகை' நாளிதழில் வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதே போல், இதே பொருள்பற்றித் திரு. ஞானசம்பந்தம் அவர்களும் ஒரு உரிமைப் பிரச்சனை யைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. கோ. இரா. ஞானசம்பந்தன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையின் நடைமுறை விதி 184 படி கீழ்க்கண்ட அவையுரிமைப் பிரச்சனையை சட்டப் பேரவையில் எழுப்ப அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

"திரு. எ. சி. இராசரத்தினம் என்பவரை ஆசிரியராகக் கொண்ட அவராலேயே இனியன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படும் "ஜெய பேரிகை" என்ற நாளிதழின் மலர்-2, இதழ் 14, தேதி, சென்னை 30–8–1968 வெளியூர் 31–8–1968-ல்"

"சட்டசபையில் யார் யார் எப்படிப் பேச வேண்டும் என்ற வரை முறையே கொஞ்ச காலமாக மீறப்பட்டு வருகிறது. அண்ணாதுரை, தான் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக சரியாகவோ தவறாகவோ தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறோம் என்ற நினைவே இன்றி அடிக்கடி பெண்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கு சட்டசபையைப் பயன்படுத்திக் கொள்கிறார்" என்ற செய்தியைப் பிரசுரித்திருக்கிறது. இந்தச் செய்தி சட்டப் பேரவையையும், அதனுடைய நிகழ்ச்சிகளையும் அவமதிப்பதுடன், ஆதாரமில்லாத இழிவான அவதூறைக் கிளப்பிவிட்டு, தமிழக மக்கள் மனதில் சட்டப் பேரவையைப் பற்றி ஓர் தவறான கருத்தைப் பரப்ப முயல்கிறது. இது அவையுரிமையை பெரிதும் பாதிக்கும் செயலாகும். எனவே, இந்தப் பிரச்சனையை அவை யுரிமைக் குழுவிற்கு அனுப்ப இம் மாமன்றம் தீர்மானிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்."

கொஞ்ச காலமாகவே, இந்தப் பத்திரிகை இழிவான அரசியலைத் தமிழகத்தில் பரப்பிக் கொண்டு வருகிறது. "ஆட்டைக் கடித்து, மாட்டை கடித்து கடைசியில் மனிதனைக் கடிப்பது போல" கடைசியில் சட்டமன்றத் தையே குறைகூறி இழிவுபடுத்துகின்ற நிலைமைக்கு வந்திருக்கிறது. இது இந்த அவையின் உரிமையைப் பாதிப்பதோடு, முதலமைச்சருக்கு நோக்கம் கற்பிப்பது, இல்லாத விஷயத்தை எடுத்துக் கூறுவது என்ற குற்றத்தையும் இழைத்திருக்கிறது. எனவே, இதை அவையின் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.